**பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டம் II இன் (யூகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம்) - 2014**

பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டத்தின் (யூகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உருக்குப் பாலங்களை நிர்மாணிப்பதற்கான கொங்கொங் மற்றும் சங்காய் வங்கியியல் கூட்டுத்தாபன வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 21 ஆம் திகதிய 53எம்/எவ்சீ/1448 (201327/எஸ்எல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இந்த செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதி அளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன.

(அ) 104 கிராமிய பாலங்களின் வடிவமைப்பு, நில அளவை மற்றும் வழங்கல்கள்,

(ஆ) உள்நாட்டு சேவைகள் மற்றும் உள்நாட்டுப் பொருட்களிற்கான பங்களிப்பு

(இ) 4 ஆண்டுகளிற்கு மேலதிகமாக யூகே தொழில் நுட்ப உதவி மற்றும் பயிற்சியை வழங்குதல்,

என்பவற்றின் மூலம் வீதி உட்கட்டமைப்பை விரிவாக்கல் மற்றும் பலப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

பின்னர் 2014 ஆகஸ்ட் 19 இன் ஒப்பந்த தெளிவுபடுத்தல் இல.4 இனால் 104 பாலங்களிற்குப் பதிலாக 88 பாலங்களால் பதிலீடு செய்யப்பட்டது. கடன் உடன்படிக்கையின் படி, பாலங்களின் வழங்கல்கள் மற்றும் நிறுவுதலிற்கான ஒப்பந்தம் ரூபா 9,778.05 மில்லியனிற்குச் சமனான ஸ்ரேலிங் பவுன் 45 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2012 ஏப்ரல் 26 இல் ஐக்கிய இராச்சியத்திலுள்ள ஒரு ஒப்பந்தகாரருக்கு மொத்தத் தொகை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தகாரர் பாலங்களை நிறுவுதலிற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வடிவமைப்பதற்கும் வழங்குவதற்கும் வேண்டப்பட்டிருந்தனர். சேயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 18 அளவில் 4 வருடங்களினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை நிதியிடல் அறிக்கை நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீதுதெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்ததா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகப் பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவுகள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மூலம்** | **கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டஒதுக்கீடு** | **பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** |
| | யூ.கே.பவுன்ஸ் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| கடன் முகவர் | 45.00 | 9,778.05 | 4,626.00 | 4,626.98 | 6,125.98 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,500.00 | 500.00 | 171.38 | 289.58 |
| ஆர்டிஏ கடன் | - | - | - | 327.00 | 327.00 |
| மொத்தம் | 45.00 | 12,778.05 | 5,126.00 | 5,124.36 | 6,742.56 |

பொதுத்திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 171.38 மில்லியன் தொகையான பெறுகைக்கு மேலதிகமாக உள்நாட்டு வர்த்தக வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனிலிருந்து ரூபா 327 மில்லியன் தொகையான பெறுகைகளும் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் , கடனின் மீளளிப்பு விபரங்கள் கணக்காய்விற்காக விவரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் பின்வருமாறு காணப்படுகின்றன.

| பாலங்களின் வகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்நிர்மாணம் செய்வதற்காக பிரேரிக்கப்பட்ட பாலங்கள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்நிர்மாணம் செய்யப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | தற்காலிகம் | நடைமுறை வேலைகளின் போது |
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| இணைப்பு பாலங்கள் | 1 | 1 | 0 | 0 |
| விரைவுப் பாலங்கள் | 5 | 1 | 0 | 4 |
| சீ-200 பாலங்கள் | 14 | 3 | 8 | 3 |
| டெல்றா பாலங்கள் | 1 | 0 | 0 | 1 |
| அற்லஸ் பாலங்கள் | 5 | 1 | 0 | 4 |
| மொத்தம் | 26 | 6 | 8 | 12 |

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த தெளிவுபடுத்தல்களினூடாக வரிசை அமைச்சிற்கும் ஒப்பந்தக்காரரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மூல ஒப்பந்த உடன்படிக்கையானது 4 சந்தர்ப்பங்களில் மாற்றியமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், மூல ஒப்பந்தத்தின் படி பாலங்களின் மொத்த எண்ணிக்கை 104 ஆக இருந்ததுடன் இது 88 பாலங்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், மூல ஒப்பந்த உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட 04 மாற்றங்களில் 01 மாற்றம் மாத்திரமே அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த வேலைகளின் ஆரம்ப நோக்கெல்லையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களானது, செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது மேலதிக இடம், நீளம், அகலம் மற்றும் பாலங்களின் நிர்மாண முன்னுரிமைகள் என்பவற்றினை இனங்காண்பதற்கு தவறியிருந்தமையை வெளிக்காட்டியதுடன், அவற்றின் மீதான ஆரம்ப திட்டங்கள் மாற்றப்பட்டிருந்தன.